**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.** 19/2019

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 – ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 06.09.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தர்ராஜன் | ஜாதி | : |
| த /பெயர் | : நடேசன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

பி.சா.2 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை

**1.** வாதி வாங்கியுள்ள புல எண்.201/டி5லுள்ள 25 சென்ட் சொத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதி ஏதேனும் கிரையம் பெற்றுள்ளரா என்றால் இல்லை. புஷ்பநாதன் பெயரிலுள்ள பட்டா, சிட்டா போன்ற ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த வருடத்திற்காக பட்டா, சிட்டாவை பார்த்தேன் என்றால் சரியாக தெரியவில்லை. தாவா சொத்து சம்மந்தமாக இடத்தை அளந்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தில் 25 சென்ட் வாதிக்கு சொந்தமானது என்றும், மீதமுள்ள சொத்துக்கள் பிரதிவாதிக்கு சொந்தமானது என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

2. எனக்கு சொந்தமான சொத்து சர்வே எண்.201/1டி ஆகும். பிரதிவாதி புஷ்பநாதன் என்பவர் என் அண்ணன் மகன் ஆவார். புஷ்பநாதன் அனுபவித்து வரும் சொத்திற்கு பட்டா, சிட்டா அனைத்தும் அவர் வைத்துள்ளார். அவர் வைத்துள்ள பட்டா, சிட்டா விலுள்ள சொத்தை தவிர வேறு சொத்துக்கள் அவருக்கு கிடையாது என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான 0.25 சென்ட் சொத்தில் பிரதிவாதி தலையிடக்கூடாது என்றும், பிரதிவாதிக்கு சொத்தில் வாதி தலையிடக்கூடாது என்றும் சாட்சியமளிக்க வந்துள்ளனே்.

3. வாதி சொந்தமான சொத்தில் பிரதிவாதி கட்டி வரும் வீட்டை வாதி இடையூறு செய்யக்கூடாது என்று சொல்லி நான் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும், பிரதிவாதி என் அண்ணன் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி ஜெகநாதன் யாரிடமிருந்து சொத்து வாங்கியுள்ளார் என்றால் பாலசுப்ரமணியன் என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார்.

4. எனக்கு தமிழ் படிக்க தெரியும். பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ள சொத்திற்கு தெற்கே பாலசுப்ரமணியன் புஞ்சைக்கு மேற்கு என்று தான் வா.சா.ஆ.2 வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.18 12:35:01 +0530

District Munsif
Mannargudi.